**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 76/2022</u>**

பெயர் : சாமிதுரை P.W.3.

த/பெ. : பெருமாள்

தேதி : 28.08.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

1. நான் யாருக்காக சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் வாதி காவேரி அம்மாள் என்பவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியான 26.03.1986 அன்று யார்யாருக்கு இடையே என்ன ஆவணம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கைலாச ஐயரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் அவரை எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் தற்போது நினைவில் இல்லை. வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியும் அவரது கணவரும் எனக்கு எவ்வளவு வருடமாக பழக்கம் என்றால் 10,15 வருடங்களாக பழக்கம். அதற்கு முன்பு அவர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. கைலாச ஐயருக்கும் ராமசாமி என்பவருக்கும் இடையே எந்த ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். காவேரியம்மாள் என்பவருக்கும் கைலாச ஐயருக்கும் இடையே என்ன ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் நிலம் சம்பந்தமாக ஆவணம் ஏற்பட்டுள்ளது. என்ன ஆவணம் என்று தற்போது நினைவில் இல்லை.மேற்படி நிலம் சம்பந்தமான ஆவணமானது எந்த இடத்தில் வைத்து ஏற்பட்டது என்றால் கைலாச ஐயரின் வீட்டில் வைத்துஎழுதப்பட்டது. அந்த ஆவணம் கையால் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. அந்த ஆவணம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. காவேரியம்மாள் அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார். நான் அதை பார்த்தேன். அந்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். வேறு யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் கைலாச ஐயர் கைொயப்பம் செய்தாரா என்றால் செய்தார். அதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான்.

3. மேற்படி ஆவணம் எழுதும் சமயத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள்

என்றால் 5 நபர்கள் இருந்தார்கள். அந்த ஆவணம் சாதாரண தாளில் எழுதப்பட்டதா அல்லது முத்திரை தாளில் எழுதப்பட்டதா என்றால் பத்திரத்தில் எழுதப்பட்டது. அந்த ஆவணத்தில் எந்த சொத்து குறிப்பிடபட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தில் எத்தனை பக்கங்களில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு பக்கத்தில் தான் கையொபப்பம் செய்தேன். 26.03.1986 தேதியில் ஏற்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது யார் பெயரில் உள்ளது அன்றைய தேதியில் இருந்தது என்றால் கைலாச ஐயரின் பெயரில் இருந்தது. கைலாச ஐயர் பெயரில் இருந்த அசல் கிரய ஆவணங்களை அன்றைய தேதியில் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

4. தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து கடந்த 10 வருடங்களாக தரிசாக தான் உள்ளது. தாவா சொத்து 10 வருடங்களாக தரிசாக உள்ளதால் அந்த சொத்து யாருடைய வசம் உள்ளது என்னால் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. காவேரியம்மாள் வசம் தான் உள்ளது. தாவா சொத்து காவேரியம்மாள் வசம் உள்ளது என எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் கைலாச ஐயர் எழுதிக்கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் கூறுகிறேன். நான் வாதியின் மகன் ஜெய்சங்கருக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 26.03.1986 தேதியிட்ட உடன்படிக்கை ஏற்பட்டதாக சொல்லப்படும் தேதியில் கைலாச ஐயருக்கு தாவா சொத்து சொந்தமானதாக இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் தினமும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். எனது சாட்சியம் நிலைநிற்க தக்கதல்ல என்றால் சரியல்ல.